# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 16 வியாழக்கிழமை 01.08.2024 கதிர் 318








# ரணிலுடன் பொதுஜன பெரமுனவை மீண்டும் இணைக்க பிரதமர் முயற்சி

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பொதுஜன பெரமுனவுக்கும் இடையில் வெடித்துள்ள முரண்பாடுகளை முடிவுக்குக் கொண்டுவரும் முயற்சிகளில் பிரதமர் தினேஷ் குணவர்த்தன ஈடுபட்டுள்ளதாக கொழும்பில் இரு தரப்பினருக்கும் நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

மகாஜன எக்ஸத் பெரமுனவின் தலைவர் என்ற முறையில் பிரதமர் இந்த முயற்சியை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை நோக்கமாகக் கொண்டு முன்னெடுத்துள்ளதாக இந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கக்கும் பொதுஜன பெரதுனவின் தலைவர் மகிந்த ராஜபக்ஷவுக்கும் நெருக்கமானவரான தினேஷ் குணவர்த்தன ஜனாதிபதித் தேர்தலில் ரணிலுக்கே பொது ஜன பெரமுன ஆதரவை வழங்க வேண்டும் என்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருந்தார்.

2➤



## பெரமுனவின் அறிவிப்பு தாமதம் நாமலா, தம்மிகவா, வேட்பாளர்?

### முடிவெடுப்பதில் முரண்படும் மொட்டு அணி





ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் அறிவிப்பு பிற்போடப்பட்டுள்ளது. அடுத்த வாரம் அறிவிப்பு வெளிவரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் அடுத்த வாரம் அறிவிக்கப்படுவார் என அக்கட்சியின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மொட்டுச் சின்னத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளரை நியமிக்க கட்சியின் அரசியல் குழு கடந்த திங்கட்கிழமை தீர்மானித்தது.

2➤

## பொலிஸ் நிர்வாக பணிகளை மேற்பார்வை செய்ய புதிய நியமனம்

இலங்கை பொலிஸ் நிர்வாகத் தலைவரின்பணிகளைமேற்பார்வைசெய்ய பிரதி பொலிஸ்மா அதிபர் லலித் பதிநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

தேசிய பொலிஸ்ஆணைக்குழு இன்று வியாழக்கிழமை இந்த தீர்மானத்தை எடுத்துள்ளது.

லலித் பதிநாயக்க தற்போது மத்திய மாகாணங்களின்சிரேஷ்ட பிரதிப்பொலிஸ் மா அதிபராக கடமையாற்றி வருகின்றார். மிக மூத்த பொலிஸ் அதிகாரியாகவும் உள்ளார்.

## ரணிலுக்கு ஆதரவளிப்போருக்கு வழங்கப்பட்ட விசேட சலுகைகள்

### அம்பலப்படுத்திய தயாசிறி ஜயசேகர

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கச் சென்ற பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு துப்பாக்கி அனுமதிப் பத்திரம் மற்றும் 1200 க்கும் மேற்பட்ட மதுபானசாலைகளுக்கான அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர இன்று தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே தயாசிறி ஜயசேகர இவ்வாறு தெரிவித்தார்.

மூன்று இலட்சம் ஷருபாவுக்கு மேல் துப்பாக்கிகளை கொள்வனவு செய்வதற்கு துப்பாக்கி அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த தயாசிறி ஜயசேகர, “அரகலய” போராட்டத்தின் போது வீடுகள் சேதமடைந்தவர்களுக்கு மூன்று முதல் நான்கு கோடி வரை வழங்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

## தேர்தல் சட்ட மீறல்கள் குறித்து 125 க்கு மேற்பட்ட முறைப்பாடுகள்





தேர்தல்சட்டத்தை மீறியமை உள்ளிட்ட 125-இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நியமனம் வழங்குதல், இடமாற்றம் மற்றும் பதவி உயர்வு வழங்குதல் ஆகியன இதற்குள் அடங்குவதாக ஆணைக்குழுவின் முறைப்பாட்டு பிரிவு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் தேர்தல் தொடர்பில் முறைப்பாடுகள் இருப்பின் தேர்தல் ஆணைக்குழுவில்

2➤

## வியாழேந்திரனின் செயலாளர்கள் இருவர் கைது



இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனின் செயலாளர்கள் இருவர் லஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டில் இன்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

மணல் அகழ்வுக்கான உரிமத்தைப் பெற்றுக் கொள்வதற்காக இவ்வாறு லஞ்சம் வழங்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர்கள் 15 இலட்சம்ரூபா லஞ்சப்பணத்தை பெற்றுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்நிலையில், கைது செய்யப்பட்ட இருவரையும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கானநடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# சமஷ்டியை ஏற்கும் வேட்பாளருக்கே தமிழர்கள் வாக்களிக்க வேண்டும்

## வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு

*ஜனாதிபதி தேர்தலில் சமஷ்டி கோரிக்கையை முன்வைக்கும் வேட்பாளருக்கே நாம் வாக்களிக்க வேண்டும் என வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு தெரிவித்துள்ளது.*

*இன்றையதினம் யாழ்ப்பாணத்தால் நடத்திய ஊடக சந்திப்பின் போதே வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் கண்டுமணி லவகுசராசா இவ்வாறு தெரிவித்துள்ளார்.*

*அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப்போகும் வேட்பாளர்களுக்கு நாம் பகிரங்கமான கோரிக்கையை முன்வைக்கின்றோம். தங்களது தேர்தல் விஞ்ஞாபனத்தில் இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வாக சமஷ்டி முறையிலான அரசியல் தீர்வை முன்வைக்க வேண்டும்.*

*இலங்கையின் வடக்கு கிழக்கு தமிழ்பேசும் மக்களுக்கு நிலையான, கௌரவமான, உரிமைகளுடன் கூடிய நிலையான அரசியல் தீர்வு கோரி 2022 ஆம் ஆண்டு ஆவணி முதலாம் திகதி சுழற்சி முறையிலான 100 நாட்கள் செயல்முனைவினை ஆரம்பித்து, 2022 கார்த்திகை எட்டாம் திகதி சமஷ்டி தீர்வுக்கான மக்கள் பிரகடனத்தை வெளியிட்டோம்.*

*இன்று வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்களான நாம் எதிர்கொண்டுவரும் அரச இனவாத அடக்குமுறையில் இருந்து மீண்டு கௌரவமான, உரிமைகளை அனுபவிக்கும் பிரஜைகளாக வாழவேண்டுமாயின் நிலையான அரசியல் தீர்வே அவசியம்.*

*ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்துக்கு மீளப்பெற முடியாத சமஷ்டி முறையிலான தீர்வு ஒன்றையே நாம் திடமாக வலியுறுத்தி நிற்கின்றோம்.*

*இலங்கையில் நாம் சிறுபான்மையினர் அல்ல இலங்கையின் வடக்கு கிழக்கு பிராந்தியத்தில் எமக்கான சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடைய இறைமையுள்ள மக்கள் சமூகத்தினராவோம். எமது சுயநிர்ணய உரிமை, இறைமை என்பதை சமஷ்டி முறைமையின் மூலம் உறுதிசெய்து கொள்ள திடசங்கற்பம் கொண்டுள்ளோம்*

*இதுவரை காலமும் ஆட்சிக்கு வந்த சிங்கள அரசியல் தலைமைகள் அரசியல் தீர்வுகள் பற்றி வாயளவில் கதைத்து தமிழ் மக்களை ஏமாற்றி வந்துவிட்டனர். எவ்வளவு காலத்துக்கு எமது வருங்கால சந்ததியினரும் இந்த அடக்குமுறைகளையும் ஏமாற்றங்களையும் அனுபவிக்கப் போகின்றோம்.*

*எமது தலைமுறையுடன் துன்பங்களை முடிவுக்குக் கொண்டுவர ஒரு மக்கள் சமூகமாக ஒருங்கிணைந்த செயற்படுவோம். இதற்கு அனைவரும் ஜனநாயக வழிநின்று செயற்படும் ஒரு சமூக இயக்கமாக பரிணமிக்க வேண்டும் என தெரிவித்துள்ளனர்*

*.அத்தோடு தமிழ்பொது வேட்பாளர் காலம் கடந்த ஞானம் நல்ல முயற்சி ஆனால் இந்த கட்டமைப்பு மக்கள் மத்தியில் பணியாற்றி எதிர் வரும் காலங்களில் மக்களுக்காக பணியாற்ற வேண்டும் .*

### பெரமுனவின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இரண்டு நாட்களில் வேட்பாளர் அறிவிக்கப்படும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அரசியல் பீடத்தினால் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கவுள்ளதாக அக்கட்சியின் உறுப்பினர்கள் குழுவொன்று அறிவித்திருந்தது.

இதனையடுத்து எழுந்துள்ள நிலைமைகள் காரணமாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் அடுத்தவாரம் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷவையா அல்லது பிரபல வர்த்தகர் தம்மிக பெரேராவையா ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்குவது என்பதில் கட்சிக்குள் முரண்பாடுகள் உருவாகியுள்ளதாகவும் தெரிகிறது.

இதேவேளை, கட்சியின் அரசியல் பீட தீர்மானத்துக்கு மாறாக செயற்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் தீர்மானித்துள்ளது.

குறித்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் தொகுதி அமைப்பாளர் பதவிகளை நீக்குவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கும் தீர்மானம் குறித்து நாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே கருத்து தெரிவித்துள்ளார்.

"பொதுஜன பெரமுன இந்த தேர்தலில் வெற்றி பெற வேண்டுமா அல்லது தோற்க வேண்டுமா என்று எனக்கு புரியவில்லை. அதனால்தான் பொதுஜன பெரமுனவின் பெரும்பான்மையானவர்கள் ரணில் விக்ரமசிங்கவை ஆதரிக்க முடிவு செய்தனர்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஒரு வேட்பாளரை முன்வைக்க மிகவும் தவறான முடிவை எடுத்ததுள்ளது. இந்த நேரத்தில் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதிக்கு ஆதரவளிக்க தீர்மானித்துள்ளார்கள் மக்கள் எங்களுடன் இருக்கிறார்கள்" என்று அவர் மேலும் தெரிவித்தார்.

### ரணிலுடன்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆனால், பசில் ராஜபக்ஷவும் நாமல் ராஜபக்ஷவும் தனியான வேட்பாளர் ஒருவரை களமிறக்க வேண்டும் என்பதில் விடாப்பிடியாக இருந்தமையால் அந்த முயற்சி பலனளிக்கவில்லை.

பிரதமர் இப்போதும் அந்த முயற்சியைத் தொடர்ந்து வருதாக அவருக்கு நெருக்கமான வட்டாரங்களை ஆதாரம்காட்டி வெளியான கொழும்புச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

இதேவேளை பிரதமர் தினேஷ குணவர்த்தன தலைமையிலான மகாஜன எக்சத் பெரமுன ஜனாதிபதித் தேர்தலில் எவ்வாறான நிலைப்பாட்டை எடுப்பது என்பது தொடர்பாக ஆராய்வதற்காக இன்று கொழும்பில் கூடவுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பது என்ற தீர்மானம் இன்றைய கூட்டத்தில் உத்தியோகபூர்வமாக எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பிரசார நடவடிக்கைகளில் பிரதமர் முக்கியமான பங்கை வகிப்பார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

### தேர்தல்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஸ்தாபிக்கப்பட்டுள்ள முறைப்பாட்டு பிரிவில் அவற்றை முன்வைக்க முடியும் என தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, தேர்தல் காலப்பகுதியில் இதுவரை கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளில் பெரும்பாலானவை, அரச சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துகின்றமை தொடர்பிலேயே கிடைக்கப்பெற்றுள்ளதாக பெஃப்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

# அத்துமீறி மீன்பிடித்த இந்திய மீனவர் கடலில் மூழ்கி மரணம்

## கடற்படை துரத்திய போது சம்பவம்

யாழ்ப்பாணம் – நெடுந்தீவு கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர் ஒருவர் கடலில் மூழ்கி உயிரிழந்தார். குறித்த சம்பவம் இன்று அதிகாலை இடம்பெற்றது. நெடுந்தீவு கடற்பரப்பில் ஐந்து இந்திய மீனவர்களுடன் படகொன்று மீன்பிடியில் ஈடுபட்டது.

இதன்போது ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்ட இலங்கை கடற்படை படகு, அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்களின் படகை கைப்பற்ற முனைந்த போது இந்திய மீனவர்களின் படகு கவிழ்ந்து குறித்த அசம்பாவிதம் ஏற்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இரு மீனவர்கள் கடலில் விழுந்த நிலையில் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார். ஒருவரை காணவில்லை என தகவல்கள் தெரிவிக்கின்றன.




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# அனலைதீவு பிரதான வீதி புனரமைப்பு ஆரம்பம்





நீண்ட காலமாக மக்களுக்கு பெரும்அசௌகரியங்களை ஏற்படுத்திவந்த அனலைதீவு பிரதான வீதி புனரமைப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. குறித்த வீதியின் புனரைப்பு அவசியம் குறித்து ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் ஊர்காவற்றுறை நிர்வாகத்தினரிடம் குறித்த பகுதி மக்கள் கொண்டுவந்த நிலையில் அது குறித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது.

இதையடுத்து அது தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா துறைசார் தரப்பினரது கவனத்துக்கு கொண்டுசென்ற நிலையில் 24 ஆம் ஆண்டுக்கான வடக்கு மாகாண , குறித்தொதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடின் கீழ் 1.7,கிலோ மீட்டர் வீதியின் புனரமைப்புக்கென 25மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இந்நிலையில் இன்றையதினம் குறித்த வீதியின் புனரமைப்பு பணிகளின் ஆரம்ப நிகழ்வுகள் அமைச்சரின் சார்பில் வடக்கு மாகாணசபையின் முன்னாள் எதிர்க்கட்சி தலைவர் கந்தசாமி கமலேந்திரன் கட்சியின் ஊர்காவற்றுறை நிர்வாக பொறுப்பாளரும் முன்னாள் தவிசாளருமான மருதயினார் ஜெயகந்தன் துறைசார் அதிகாரிகள் பிரதேச மக்கள் என பலரும் கலந்துகொண்டு முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# தேசிய சமாதான பேரவையின் “நிலைமாற்றத்திற்கான நீதி”

## கிளிநொச்சியில் இன்று நடைபெற்றது







மாவட்ட அளவிலான கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் தேசிய சமாதான பேரவையின் “நிலைமாற்றத்திற்கான நீதி” செயலமர்வு இன்று வியாழக்கிழமை நடைபெற்றது.

நீதி மற்றும் பொறுப்பு கூறுவதற்கான மக்கள் ஒன்றிணைவு செயற்றிட்டத்தின் கீழ் அரச அதிகாரிகளுக்கான மாவட்ட அளவிலான தகவல் அமர்வாக குறித்த செயலமர்வு நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ். முரளிதரன் அவர்களின் தலைமையில், மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் குறித்த செயலமர்வு நடைபெற்றது.

இச் செயலமர்வில் தேசிய சமாதான பேரவையின்நிறைவேற்றுபணிப்பாளர்கலாநிதி ஜெகான் பெரேரா இணையவழி செயலி ஊடாக கலந்துகொண்டுதெளிவூட்டல்களை வழங்கியிருந்தார்.

மேலும் இதன் வளவாளராக நீதி மற்றும் பொறுப்புகூறுவதற்கான மக்கள்ஒன்றிணைவு செயற்றிட்டத்தின்முகாமையாளர்சட்டத்தரணி என்.விஜயகாந்தா கலந்து கொண்டிருந்தார்.

இந் நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் (காணி), திட்டமிடல் பணிப்பாளர், உதவி மாவட்ட அரசாங்க அதிபர், மாவட்ட ஒருங்கிணைப்பு குழுத் தலைவரின் இணைப்பாளர், உதவிபிரதேசசெயலாளர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள், உதவி திட்டமிடல் பணிப்பாளர்கள், திணைக்களங்களில் மாவட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் துறை சார்ந்த உத்தியோகத்தர்கள் என பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டிருந்தனர்.



# ஊடகவியலாளர் நிலக்சன் நினைவேந்தல்





ஊடகவியலாளர் சகாதேவன் நிலக்சனின் 17ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் இன்றைய தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

யாழ். ஊடக அமையத்தில் அமையத்தின் தலைவர் கு. செல்வக்குமார் தலைமையில் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வில் நிலக்சனின் உருவ படத்திற்கு மலர் மாலை அணியப்பட்டு, மலரஞ்சலி செலுத்தப்பட்டு, சுடரேற்றப்பட்டது.

யாழ்.பல்கலை கழக ஊடக வளங்கள் பயிற்சி மையத்தின் ஊடக கற்கை மாணவனும், சாரளம் சஞ்சிகையின் ஆசிரியரும், யாழ், மாணவர் பேரவையின் முன்னாள் தலைவருமான சகாதேவன் நிலக்சன் 2007ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 01ஆம் திகதி அவரது வீட்டில் இருந்த வேளை , அவரது வீட்டிற்கு அதிகாலை 5 மணியளவில் சென்ற ஆயுதாரிகள் நிலக்சனை வெளியே அழைத்து அவரது பெற்றோர்கள் முன்னிலையில் சுட்டுப்படுகொலை செய்தனர்.

# 92 எம்.பி.க்கள் ரணிலை சந்தித்தது தேர்தல் சட்டத்தை மீறிய செயற்பாடு

## தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு



ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவைப் பெறுவதற்காக ஜனாதிபதி செயலகத்திற்கு அழைக்கப்பட்ட ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு எதிராக தேர்தல் சட்டத்தை மீறியதாக புதிய சுதந்திர முன்னணியின் தலைவரால் தேர்தல்கள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடுவதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கட்டுப்பணம் செலுத்தியுள்ள நிலையில், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவளிக்குமாறு கூறி பிரதமர், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர், மற்றும் ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி செயலகத்துக்கு அழைக்கப்பட்டதாக புதிய சுதந்திர முன்னணி தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளது.

இவை தொடர்பான படங்கள், வீடியோக்கள் மற்றும் உத்தியோகபூர்வ அறிவித்தல் ஆகியவற்றுக்கு பரந்த விளம்பரம் வழங்க ஜனாதிபதி ஊடகப் பிரிவு ஏற்பாடு செய்திருந்தது என்றும் புதிய சுதந்திரமுன்னணி தனது முறைப்பாட்டில் சுட்டிக்காட்டியுள்ளது. "ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராக போட்டியிடுவதாக கூறும் ரணில் விக்ரமசிங்க, ஜனாதிபதியாக தனது பொறுப்பான பொலிஸ்மா அதிபரை நியமிக்கும் பணியை தவிர்த்துக் கொண்டு ஜனாதிபதி செயலக அலுவலகம், அதன் வளங்கள், ஜனாதிபதி ஊடகப் பிரிவு, பொதுப் பணத்திலிருந்து ஊதியம் பெறும் பணியாளர்கள் என பலவற்றையும் பயன்படுத்தி தேர்தல் பிரசாரம் தொடர்பான கலந்துரையாடல்களை மேற்கொள்வது வெறுக்கத்தக்கது என்று அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இவ்வாறு பொது நிதியை தவறாகப் பயன்படுத்தி தேர்தல் பிரசார நடவடிக்கைகளால், தேர்தல் சட்டத்துக்கு உட்பட்டு செயற்படும் தம்மைப் போன்ற செல்வந்தர்கள் அல்லாத ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு பாரிய அநீதி இழைக்கப்படுவதாகவும் இவ்விடயத்தில் நடவடிக்கை எடுக்குமாறும் புதிய சுதந்திர முன்னணியின் தலைவர் தனது முறைப்பாட்டில் சுட்டிக்காட்டியுள்ளார்.

# இரகசியமாக வந்து ரணிலை சந்தித்தாரா ஜெய்சங்கர்?

## விமல் வீரவன்ச தெரிவிக்கின்றார்

இந்திய வெளியுறவு அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெயசங்கர் இரகசியமாக இலங்கைக்கு வந்து இங்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்துள்ளதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.



பெரெல்லவில் உள்ள கட்சித் தலைமையகத்தில் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு அவர் இதனைத் தெரிவித்தார்.

"எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு வந்து நாட்டின் இறையாண்மையைப் பறிக்கும் பத்து புரிந்துணர்வு உடன்படிக்கைகளில் கைச்சாத்திடப் போகிறார். இந்திய - இலங்கை ஒப்பந்தம் போன்று அவர்களிடமிருந்து தப்பிக்க, இந்த நாட்டில் உள்ள அனைத்து அரசியல் இயக்கங்களும் தங்களின் சர்ச்சைகளை ஒதுக்கி வைத்துவிட்டு, பத்து புரிந்துணர்வு ஒப்பந்தங்களையும் தடுக்க ஒற்றுமையாக செயல்பட வேண்டும்" என்றும் விமல் வீரவன்ச இதன்போது அழைப்பு விடுத்தார்.

"இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெயசங்கர் சில வாரங்களுக்கு முன்பு, இரண்டு நாட்கள் விஜயமாக இலங்கை வந்தார். பல இராஜதந்திர சந்திப்புகள் நடைபெறுவதைக் கண்டோம்.

ஆனால் சில தினங்களுக்கு முன்னர் ஜெயசங்கர் மீண்டும் இரகசியமாக இலங்கைக்கு வந்துள்ளார். இங்கு ஜனாதிபதியை சந்தித்து, இரு நாடுகளுக்கும் இடையே தீர்க்கமான விளைவை ஏற்படுத்தும் பல விஷயங்கள் குறித்து விவாதித்து, ஒப்பந்தம் செய்து கொண்டு இந்தியா புறப்பட்டுச் சென்றார்" என்றும் விமல் வீரவன்ச குறிப்பிட்டார்.

இது ஊடகங்களுக்கு வெளியாகி கவனத்தை ஈர்த்த தகவல் அல்ல என்று தெரிவித்த விமல் வீரசன்ச, தாங்கள் தகவல்களைப் பெறும் பல முக்கிய ஆதாரங்களில் இருந்து இந்தத் தகவலைச் சரிபார்த்த பின்னர் இதனை ஊடகங்களுக்கு வெளிப்படுத்துவதாகவும் தெரிவித்தார்.



# வட மாகாண பாடசாலை எறிபந்து போட்டி கிராமப்புற பாடசாலைகள் பிரகாசிப்பு







17 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான போட்டியில் முல்லைத்தீவு கோட்டை கட்டிய குளம் மகா வித்தியாலயம் சம்பியனாகவும், மன்னார் அடம்பன் மகா வித்தியாலயம் இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டது.

20 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான போட்டியில் வவுனியா காங்கராயன்குளம் மகா வித்தியாலயம் சம்பியன்களாகவும், மன்னார் அடம்பன்மகா வித்தியாலயம் இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

17 வயதிற்குட்பட்ட பெண்களுக்கான போட்டியில் வவுனியா காங்கராயன்குளம் மகா வித்தியாலயம் சம்பியன்களாகவும், யாழ்ப்பாணம் இராமநாதன் கல்லூரி இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

20 வயதிற்குட்பட்ட பெண்களுக்கான போட்டியில் மன்னார் அடம்பன் மகா வித்தியாலயம் சம்பியன்களாகவும், வவுனியா கனகராயன்குளம் மகா வித்தியாலயம் இரண்டாம் இடத்தையும் பெற்று தேசிய மட்ட போட்டிகளுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

நான்கு வகை நிலத்திலும் காணி விற்பனைக்கு!
வடக்கு (யாழ்ப்பாணம்) - கிழக்கு (மட்டக்களப்பு) - மலையகம் (பதுளை)

கி.அரியாலை
மருதம்
வயலுடன் கூடிய
மேட்டுக்காணியும்
பண்ணை வீடும்
பொழுதுபோக்குகளும்...!

எழுதுமட்டுவாழ்
முல்லை
மரங்கள் நிறைந்த
இயற்கை சூழலில்
ஓய்வுகால வீட்டிற்கான
காணித் துண்டுகள்...!

மட்டக்களப்பு
நெய்தல்
கடலும் ஆறும்
அருகருகே அமைந்த
மீன்பாடும் தேன்நாட்டில்
விடுமுறை வீட்டிற்கு...!

அப்புத்தளை
குறிஞ்சி
மலைகளின் நடுவில்
குளிர்ந்த பிரதேசத்தில்
வாசனைத் திரவியமும்
சுற்றுலா விடுதியும்...!

காணி கொள்வனவிற்கு : 0777 43 5557

# கலாசாலை ஆசிரியர்களுக்கு கணிதம் கற்பித்தல் தொடர்பில் கருத்துரை




கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் பிரதி புதன் தோறும் இடம்பெற்றுவரும் ஒன்றுகூடலில் கணிதம் கற்பித்தல் தொடர்பான கருத்துரை நேற்று இடம்பெற்றது.

இதில் மூத்த எழுத்தாளர் நெடுந்தீவு மகேஷ் கலந்து சிறப்பித்தார். கலாசாலையின் ஆங்கிலநெறி ஆசிரிய மாணவி பாத்திமா றிஸ்ரினா நிகழ்வுகளை நெறிப்படுத்தினார்.

ஆசிரிய மாணவன் இ.செந்தூர்ச்செல்வன் நெடுந்தீவு மகேஷ் எழுதிய தாரணி ஒரு ஆச்சரியக் குறி என்ற நூல் பற்றிய நயப்புரையை ஆற்றினார்

நெடுந்தீவு மகேஷ் பற்றிய அறிமுகவுரையை கலாசாலை விரிவுரையாளர் வேல் நந்தகுமார் மேற்கொண்டார்.

நிகழ்வில் நிறைவுரையாற்றிய கலாசாலை அதிபர் ச.லலீசன் ஒரு எழுத்தாளானாவதற்கு அவசியமான விடயம் அனுபவங்களைச் சேகரித்து வைத்திருத்தல் என்று குறிப்பிட்டதோடு ஆசிரியர்கள் ஆக்கத்திறன் மிக்கவர்களாக தம்மை உருவாக்கிக்கொள்ளவேண்டும் என்றும் அதற்கேற்றாற்போல கவிதைகள் சிறுகதைகள் போன்றவற்றைப் படைப்பதற்கு முயற்சி செய்யுமாறும் ஆலோசனை கூறினார்.

எழுத்தாளர் நெடுந்தீவு மகேஷ் கலாசாலை சமூகத்தினரால் கௌரவிக்கப்பட்டார்.



# திருக்கோணேஸ்வர வரலாறு போட்டியும் பரிசளிப்பும்

திருகோணமலை பரடைஸ் பாலர் பாடசாலையின் 9வது ஆண்டு நிறைவை முன்னிட்டு

திருக்கோணேஸ்வர ஆலய வரலாற்றுப் படிப்பினைகளை இளைய தலைமுறைக்கு ஊடுகடத்தும் நோக்கில் வினாவிடைப் போட்டியும் பரிசளிப்பு நிகழ்வும் அண்மையில் திருகோணமலை ஆர்.கே.எம்.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் இடம்பெற்றது.

நிகழ்வில் ஆன்மீக அதிதியாக குருமகா சந்நிதான தென்கயிலை ஆதின குரு முதல்வரான தவத்திரு அகத்தியர் அடிகளாரும், பிரதம விருந்தினராக, யாழ்ப்பாணம் சிவபூமி அறக்கட்டளை தலைவரான செஞ்சொற் செல்வர் ஆறு திருமுகனும், சிறப்பு விருந்தினர்களாக, வரலாற்று ஆய்வாளரான என்.கே.எஸ்.திருச்செல்வம், சட்டத்தரணி உமாகரன் இராசையா, மாவட்ட கலாச்சார உத்தியோகத்தர் திருமதி லக்ஷ்மிதேவி சிறிதரன் ஆகியோரும் மற்றும் மாணவர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

# பாரம்பரிய உணவு, உடை கண்காட்சி







திருகோணமலை முள்ளிப்பொத்தானை சல்மா முன்பள்ளி சிறுவர்களின் பாரம்பரிய நிகழ்வு தொடர்பிலான கண்காட்சி இன்று இடம் பெற்றது.

இலங்கை பல்லின சமூகத்தின் கலாச்சார ஆடைகள் மற்றும் பண்டிகை உணவு பரிமாறும் நிகழ்வும் ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்நிகழ்வில் தம்பலகாமம் பிரதேச செயலக முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எஸ்.அன்வர்தீன் உட்பட ஆசிரியர்கள், பெற்றார்கள் என பலரும் கலந்து கொண்டனர்.









# கலாசாலையின கலாதீபம் வெளிவந்தது

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் மாதாந்த மின் சஞ்சிகையான கலாதீபம் இதழின் ஆகஸ்ட் மாத இதழ் வெளிவந்துள்ளது.

கலாசாலையில்கடந்தஜூலை மாதத்தில்இடம்பெற்றநிகழ்வுகள் பற்றிய தொகுப்புகளுடன் ஆசிரியமாணவர்கள் தாம் தரிசித்த பாடசாலைகளில் பெற்ற அனுபவங்கள் குறித்த பதிவுகளையும்தாங்கி சஞ்சிகை வெளிவந்துள்ளது.

கலாசாலை விரிவுரையாளர் தர்ஷினி முத்துராஜாவை பிரதம ஆசிரியராக கொண்டு ஊடக மன்றத்தினரால் இச்சஞ்சிகை ஒவ்வொரு முதலாம் திகதியும் வெளியீடு செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது.



# தவறுதலாக வெடித்த துப்பாக்கி

பொலன்னறுவை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சேவாகம பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான நபர் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கிடைத்த தகவலுக்கு அமைய பொலன்னறுவை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

பொலன்னறுவை சேவகம பகுதியைச் சேர்ந்த 46 வயதுடையஒருவரேசம்பவத்தில் காயமடைந்துள்ளார்.

காயமடைந்த நபர், குரங்குகளை விரட்ட உரிமம் பெற்ற துப்பாக்கியை எடுத்துச் சென்றபோது, தடுமாறி துப்பாக்கி வெடித்துள்ளதாக மனைவி வாக்குமூலம் அளித்துள்ளார்.

எனினும் காயம் அடைந்தவர் தொழில் கடன் காரணமாக கடும் மன உளைச்சலுக்கு ஆளாகி இருப்பது தெரியவந்துள்ளது.

இதனால் துப்பாக்கியால் சுட்டு தற்கொலைக்கு முயன்றிருக்கலாம் எனவும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

பொலன்னறுவை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.08.2024இல் வெளியிடப்பெற்றது.